தலைமைச் செயலகத்தில், நேற்று (07.01.2025) நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் 2025-2026 ஆம் நிதியாண்டில் மாநிலத்தில் முன்னுரிமை துறைகளுக்கு NABARD வங்கி மூலம் கடன் திறன் வெளியிடுவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நிதித் துறை (பட்ஜெட்) துணைச் செயலாளர் பிரதிக் தயாள், நிதித் துறை துணைச் செயலாளர் செ.ஆ. ரிஷப் மற்றும் NABARD தலைமைப் பொது மேலாளர் ஆர்.ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதுதில்லியில் நேற்று (07-01-2025) ஒன்றிய தரைவழி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி தலைமையில் நடைபெற்ற 42வது போக்குவரத்து மேம்பாட்டுக் குழு மற்றும் மாநில போக்குவரத்து அமைச்சர்கள் கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கலந்து கொண்டார். தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை கூடுதல் ஆணையர் சிவகுமரன், இணை ஆணையர் (நிர்வாகம்) நெல்லையப்பன், இணை ஆணையர் சாலை பாதுகாப்பு) கே.சந்திரசேகர், வட்டார போக்குவரத்து அலுவலர் சம்பத் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரை கண்டித்து

பல்லவபுரம் ஆர்ப்பாட்டத்தில் 7 ஆயிரம் கழகத்தினர் திரண்டு கண்டன முழக்கம்!

பல்லவபுரம், ஜன.8-

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரை கண்டித்து பல்லாவரத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 7 ஆயிரம் கழகத்தினர் திரண்டு பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர். மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ, தலைமையிலும், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ, வரவேற்புரையிலும் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து சுப.வீரப்பாண்டியன் சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஒன்றிய அரசின் ஏஜெண்டாக தமிழ்நாட்டின் உரிமைகளில் அத்து மீறல்களை செய்யும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்தும் ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசை மாற்றுவித்தைகளை செய்யும் அ.தி.மு.க. பா.ஜ.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டோன்மெண்ட் பல்லாவரம் பேருந்து நிலையம் அருகில் மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ, தலைமையிலும், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ, வரவேற்புரையிலும், மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணை செயலாளர்கள் வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப.வீரப்பாண்டியன் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து கண்டன உரையாற்றினார்.

தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதிய லிங்கம், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், த.ஜெயக்குமார், வே.கருணாநிதி, எஸ்.இந்திரன், டி.காமராஜ், பெருங்களத்தூர் சேகர், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், எம்.டி.லோகநாதன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், எஸ்.நரேந்திரன், டி.பாபு, எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தொ.மு.ச. பேரவைச் செயலாளர் இரா.பொன்னுராம், கழக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், சீதா ஆனந்தன், க.தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், எஸ்.சதீஷ், கே.எத்திராஜ், எம்.செல்வகுமார், மா.கணேஷ்பாபு, இரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு, சே.அருள்தேவி,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், தையூர் வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலகண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், எல்.பிரபு, தி.க.பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஜா.செந்தில் தேவராஜ், பா.ஞானபிரகாசம், சசிகலா, த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ்கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர்.ஆர்.ஜெயராம்மார்த்தாண்டம், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

'கடல் ஆமைகள் பாதுகாப்பு' விழிப்புணர்வு - மாநில அளவிலான பயிலரங்கம்!

வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவக்கி வைத்தார்!

சென்னை, ஜன.8-

வனத்துறை அமைச்சர் முனைவர். க.பொன்முடி, "கடல் ஆமைகள் பாதுகாப்பு" விழிப்புணர்வு குறித்த மாநில அளவிலான பயிலரங்கினை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

வனத்துறை அமைச்சர் நேற்று (07.01.2025) கிண்டி சிறுவர் இயற்கை பூங்காவில் கடல் ஆமைகள் பாதுகாப்பு மற்றும் மீட்கும் முயற்சிகள் குறித்து நடைபெற்ற மாநில அளவிலான பயிலரங்கு நிகழ்ச்சியை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கடல் ஆமைகள் பாதுகாப்பு திறனை மேம்படுத்த விஞ்ஞான பூர்வமான மேலாண்மை திட்டத்திற்காக கடல் ஆமை செயலியினையும் (App) அமைச்சர் தொடங்கி வைத்தார்.

வனத்துறை அமைச்சர், முனைவர். க.பொன்முடி இந்நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில்,

"தமிழ்நாடு வனத்துறையின் மூலம் கடந்த பல ஆண்டுகளாக கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம் கடலோரங்களில் ஆமை முட்டைகள் பாதுகாப்பு மையம் மற்றும் கடல் ஆமைகள், குஞ்சுகள் பாராமரிப்பு மையம் உருவாக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

குறிப்பாக சென்னை, நாகப்பட்டினம் கடற்கரையில் "ஆமைகள் பாதுகாப்பு மையங்களை" நிறுவி தேசிய அளவில் இந்த ஆமை பாதுகாப்புத் திட்டத்தை, அடுத்த உயர்நிலைக்கு எடுத்துச் செல்லும் முயற்சியில் தமிழ்நாடு அரசு முன்னோடி மாநில மாக செயல்பட்டு வருகிறது" எனத் தெரிவித்தார்.

மேலும், உலகளவில் ஏழு வகையான ஆமை இனங்கள் உள்ளன என்றும், இவைகளில் 5 வகையான சித்தாமை, பச்சை ஆமை, அலுங்காமை, தோணி ஆமை மற்றும் பெருந்தலை ஆமை தமிழ் நாட்டுக் கடலோர மாவட்டங்களில் பரவலாகக் காணப்படுகின்றன என்பதையும், இந்நிகழ்ச்சி மூலம் தெளிவுபடுத்தினார்கள்.

இவ்வகையில், கடந்த 202324 ம்ஆண்டு 53 கடல் ஆமைகள் குஞ்சு பொரிப்பகங்கள் நிறுவப்பட்டு 2,58,907 முட்டைகள் பாதுகாக்கப்பட்டு, வெற்றிகரமாக 2,15,778 குஞ்சுகள் கடலுக்குள் விடப்பட்டுள்ளன. இது தேசிய அளவில் கடல் ஆமை பாதுகாப்பாளர்களின் தனிகவனத்தை ஈர்த்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது என்று வனத்துறை அமைச்சர் முனைவர். க.பொன்முடி கூறினார்.

வன உயிரின பாதுகாப்புச் சட்டம் 1972ன் படி கடல் ஆமைகள், கடற்பசு, கடல் குதிரை மற்றும் கடல் அட்டை போன்ற கடல்சார் உயிரினங்களை பாதுகாக்க தமிழ்நாடு அரசு சீரிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்றும், மீன் மற்றும் கடல் உயிரினங்களின் ஆரோக்கியத்தை சீரான சூழல் உருவாக்கி புதிய தொழில் திட்டங்களை ஏற்படுத்தி, பாதுகாப்பதன் மூலம் கடல் வாழ் உயிரினங்கள் பாதுகாக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டார்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மை செயலர் முனைவர். ப.செந்தில்குமார், தனது தலைமையுரையில், தமிழ் நாட்டில் 1076 கி.மீட்டர் தொலைவு கடலோரபகுதிகள் உள்ளன என்பதையும், இப்பகுதியில் 5 வகையான கடல் ஆமைகள் பரவலாக காணப்படுகின்றன என்பதையும் விளக்கினார். மேலும், தனது உரையில் கீழ்க்கண்ட சீரிய முயற்சியினால்

Turtle Conservation Goals - ஆமை பாதுகாப்பின் நோக்கம்

Turtle Team - ஆமைகள் பாதுகாப்பு குழு

Site Preparation- ஆமை பாதுகாப்பு மையம்

Data Collection - Research - தகவல் சேகரிப்பு

மற்றும் ஆராய்ச்சியின் மூலம் புள்ளி விபரங்கள் சேகரித்து, ஆமை பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு திட்டங்களை விஞ்ஞான ரீதியில் கொண்டு செல்ல விளக்கிக் கூறினார்.

மேலும், இந்நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக வனத்துறை உயர் அலுவலர்கள், கடல் ஆமை பாதுகாப்பு விஞ்ஞானிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஓய்வு பெற்ற வன அலுவலர்கள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி துணைமேயர், மு.மகேஷ்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறை தலைவர்), சீனிவாஸ் ரா.ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வனஉயிரின காப்பாளர், ராகேஷ்குமார் டோக்ரா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்கள், உதயன் மற்றும் அன்வருதின், கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனஉயிரினம்), முனைவர். வ.நாகநாதன், கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் இயக்குநர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர், ஆஷிஸ்குமார் ஸ்ரீவத்ஸவா, சென்னை வன உயிரினக் காப்பாளர், மணிஷ் மீனா மற்றும் வனத்துறை உயர் அதிகாரிகள், அலுவலக பணியாளர்கள், களப் பணியாளர்கள்ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாதவரம் எஸ். சுதர்சனம் தலைமையில் கனிமொழி கருணாநிதி பிறந்த நாள்!

சென்னை வடகிழக்கு மாவட்ட மகளிரணி சார்பில் நலத்திட்ட உதவிகள்!

எம்.கோமலவள்ளி நிகழ்ச்சி ஏற்பாட்டில் கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை ஜன:8

சென்னை வடகிழக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி பிறந்த நாள் விழாவை முன்னிட்டு,மாற்றுத் திறனாளி கள், திருநங்கைகள் மற்றும் கைம்பெண்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (8.1.2025 புதன் கிழமை) மாலை 3 மணி அளவில் 7வது வட்டம், சி.ஆர். விதிருமண மண்டபம், சரவணா நகர் திருவொற்றியூரில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் 7வது வட்டக் கழக செயலாளர் தா. கார்த்திகேயன் வரவேற்புரை யாற்றுகிறார்.

விழாவில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ, நலத் திட்ட உதவிகளை வழங்குகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி,மாநில மகளிர் அணி இணை செயலாளர் குமரி விஜயகுமார், திருவொற்றியூர் தொகுதி எம்.எல்.ஏ கே.பி.சங்கர்,மண்டல குழு தலைவர் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு. தனியரசு,மாநில சமூக வலைதள பொறுப்பாளர் டாக்டர் யாழினி, மேற்கு பகுதி செயலாளர் வை.மா. அருள்தாசன், மாவட்ட அவை தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், ஏ.வி.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எம். கோமலவள்ளி செய்துள்ளார்.

நிகழ்ச்சியில் 7வது வட்டக் கழக அனைத்து நிர்வாகிகள்,மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சி முடிவில் மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் எஸ். அம்மு நன்றி கூறுகிறார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி கிழக்கு ஒன்றியம் சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திருத்தணி கிழக்கு ஒன்றிய பீரகுப்பம் அரசு மருத்துவமனையில் ஒன்றிய கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன், ஏற்பாட்டில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் பெண்களுக்கு பெட்டகம் நோயாளிகளுக்கு பால் ரொட்டி பழங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் வழங்கினார். உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம. கிரண், ஷெரிப், கே.சிரஞ்சீவிலு,எம்.பாபு, கோபி, ஆறுமுகம், விஜயகுமார்,வேலு, ஜெய் பிரசாத், உதயசிங், சந்திரசேகர், தசரசன், குப்பையா, ரமேஷ், பலராமன், சீனிவாசன், கஜேந்திரன், பிரபுராஜ், தேவேந்திரன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தமிழர் திருநாள் மற்றும் தமிழ் புத்தாண்டு பண்டிகையை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி 110வது வார்டு, அப்பாசாமி தெருவில் வசிக்கும் பொதுமக்கள் 1000 நபர்களுக்கு மாவட்ட கழக செயலாளர்நே.சிற்றரசு ஏற்பாட்டில் புடவை, வேஷ்டி, சட்டை மற்றும் 2025-ஆம் ஆண்டுக்கான நாள்காட்டிகள் பொங்கல் பண்டிகை விழாகால நலத்திட்டமாக வழங்கப்பட்டு, வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. உடன் ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, அகஸ்டின்பாபு, வட்டக் கழகச் செயலாளர்கள் த.குணசேகரன், கே.எஸ்.தினேஷ் பிரபு, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துபாய் வி.ஆர்.விஜய், ச.அசோக்குமார், மு.சீனிவாசன், திருமலை பொண்ணுரங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் மூலம் குறைந்த கட்டணத்தில்

50 லட்சம் உயர் வரையறை செட்டாப் பாக்ஸ்கள்!

கேபிள் ஆபரேட்டர்களுக்கு வேண்டுகோள்!

சென்னை, ஜன.8

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலம் 50 இலட்சம் உயர் வரையறை செட்டாப் பாக்ஸ்கள் வழங்கப்படுகின்றன. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைகள், உயர் வரையறை செட்டாப் பாக்ஸ்கள் பெற்று பயனடைந்திட கேபிள் ஆபரேட்டர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ரூபாய் 140 + GST என்கிற குறைந்த சந்தா கட்டணத்தில் கேபிள் டிவி சேவைகளை பொது மக்களுக்கு சிறந்த முறையில் வழங்கி வருகிறது. உயர் வரையறை (HD High Definition) செட்டாப் பாக்ஸ்கள் வழங்குவது குறித்து கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் சந்தாதாரர்களின் கோரிக்கைக்கு இணங்க, முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி 50 இலட்சம் உயர் வரையறை (HD High Definition) செட்டாப் பாக்ஸ்களை விநியோகிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

முதற்கட்டமாக இரண்டு இலட்சம் HD செட்டாப் பாக்ஸ்கள் பெறப்பட்டு, சந்தாதாரர்களுக்கு உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தேவைக்கேற்றவாறு HD செட்டாப் பாக்ஸ்கள் வழங்குவதற்குப் போதுமான செட்டாப் பாக்ஸ்கள் கையிருப்பில் உள்ளன.

HD செட்டாப்பாக்ஸ்கள் தேவைப்படும் உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் ரூ. 500/ வைப்புத் தொகை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே, மிகக் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைகளை வழங்கி வரும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் HD செட்டாப் பாக்ஸ்களை பெற்றுப் பயனடையுமாறு அனைத்து உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் மற்றும் சந்தாதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் பதிவு பெற்று, செயலிழக்க நிலையில் (Inactive LCOs) உள்ள உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் அனைவரும் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி HD செட்டாப் பாக்ஸ்களைச் செயலாக்கம் செய்யவும், தவறும் பட்சத்தில் அப்பகுதியில் புதிய உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் நியமனம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு நிறைவான சேவை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக உள்ளூர் கேபிள் ஆபரேட்டராக பதிவு செய்ய விரும்புபவர்கள் www.tactv.in என்கிற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம். மேலும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து அளிக்கலாம் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சென்னை வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று (8-1-2025 - புதன்கிழமை) மாலை 5.00 மணியளவில், இராயபுரம் அறிவகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 11.01.2025 அன்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் பொங்கல் விழா நிகழ்ச்சி.

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் முதற்கட்டமாக 4, 5, 6, 8, 9, 10 மற்றும் 13 ஆகிய மண்டலங்களில் 59 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொண்டு தீவிரமாக கட்டடக் கழிவுகளை அகற்றும் தூய்மைப் பணியினை மேயர் திருமதி ஆர்.பிரியா , நேற்று (07.01.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், , நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, கண்காணிப்புப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) கே.விஜயகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கடலூர் மாநகராட்சி, 34 வது வார்டு, கடலூர் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பாலன் காலனியில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சமுதாய கூடம் திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு மாநகராட்சி துணை மேயர் தாமரைச்செல்வன் தலைமை தாங்கினார். விழாவில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. அய்யப்பன் கலந்து கொண்டு சமுதாய கூடத்தை திறந்து வைத்தார். மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா, ஆணையாளர் அனு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதிபெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், நிர்வாகிகள் முருகானந்தம், கருணையாளன், குமரேசன், குணசேகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.